மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அரசாங்கம் கடன் வசூலிப்பது சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், காரியங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படுத்துவதற்கும் சேர்த்துத் தான். ஆகவே எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை என்ற முறையில் அவர்கள் பங்கை அவர்கள் செய்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கோவையில் தேசியக் கொடி எரிக்கப்பட்டதைக் குறித்தும், திரு. சுரேந்திரன் அவர்கள் லாரி கவிழ்ந்து இரண்டு பேர் உயிர் இழந்ததைக் குறித்தும், டாக்டர் ஹாண்டே அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சிகளைக் குறித்தும் இங்கே மூன்று ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நாள் நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்காக என்று ஆளுநர் அவர்கள் வரையறுத்துக் கொடுத்திருக்கும் நாள். ஆகவே இன்று வேறு எந்த நிகழ்ச்சியும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று விதிமுறை இருப்பதைக் கருதி நான் இந்தத் தீர்மானங்களுக்கு முடிவு அளிக்க இயலாத நிலையில், அவற்றை நாளைய தினம் எடுத்துக்கொள்வதாக இருக்கிறேன். ஏற்கனவே, முன்பு இங்கிருந்த பேரவைத் தலைவர்கள்

" Motion that the meeting be adjourned cannot be moved during the " Budget session " as the days have been specifically allotted by his Excellency the Governor for the Budget "

என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, அவற்றை நாளை எடுத்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS